**CC.No. 553/2025 (JM.No.II, DHARMAPURI)**

**25.02.2026**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரிகள் ஆஜர்)**

**PW–1 : திரு.மணி, த/பெ.அய்யன்துரை**

**முதல் விசாரணை**

நான் மூலக்காட்டில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைஎனக்கு தெரியும். புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். கடந்த 2 வருடங்களுக்கு முன்பு இரவு 07.00 மணிக்கு நான் வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு வரும் போது 1ம் எதிரி ராஜா பேட்ரி அடித்தார். நான் என்னுடைய வாகனத்தை மெதுவாக நிறுத்தினேன் அப்போது 2ம் எதிரி வசந்த மிளகாய் தூளை என் கண்ணில் தூவினார். 1ம் எதிரி ராஜா என்னை வலது கண்ணின் மீது கல்லால் குத்தினார். எதிரிகள் இருவரும் என்னை அடித்து போட்டுவிட்டு அவர்கள் சென்று விட்டார்கள். நான் காயங்களுடன் வீட்டிற்கு சென்றேன், அப்போது என்னுடைய மருமகள் வீட்டில் இருந்தார். என் மருமகளிடம் என் மகனுக்கு போன் செய்ய சொன்னேன் எதிரிகள் அடித்தவிட்டதாக, பின்பு என்னுடைய மகன் தங்கம் வந்தார். எதிரிகள் தாக்கியதையும், சம்பவயிடத்தில் வாகனத்தை போட்டுவிட்டு வந்ததையும் அவனிடம் கூறினார். என்னை தொப்பூர் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்துவிட்டு, தருமபுரி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன், சிகிச்சையில் இருக்கும் போது போலிஸார் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

எந்த தேதி, மாதம், வருடம் சம்பவம் நடநதது என்று எனக்கு ஞாபகமில்லை. நான் வந்த இருசக்கர வாகனத்தின் பதிவு எண் எனக்கு தெரியாது. Hero Honda வாகனத்தில் வந்தோம். எனக்கு மது அருந்தும் பழக்கம் இல்லை. சோலியநல்லூரிலிருந்து மலையூருக்கு செல்லும் ரோட்டிலிருந்து மண் பாதை வழியாக எங்கள் வீட்டிற்கு செல்ல முடியும் என்றால் சரிதான். மேற்படி ரோடு தெற்கிலிருந்து வடக்கு நோக்கி செல்லும் என்றால் சரிதான். அதில் நாங்கள் மேற்பக்கதிலிருந்து இறக்கி வடக்கு பக்கம் திருப்பி மீண்டும் மேற்கு பக்கம் திரும்பும் மூலையில் என்னுடைய வீடு உள்ளது என்றால் சரிதான். பேட்ரிலைட் அடித்ததாக சமபவம் கூறப்படும் இடத்தில் மூன்று நபர்கள் இருந்தனர். அவர்கள் செல்வி, ராஜா, வசந்தா ஆவார். நல்லப்பன் என்பவர் வீட்டிற்கு அருகில் இருந்து தான் பேட்ரி லைட் அடித்தார்கள் என்றார் சரிதான். நல்லப்பன் என்பவர் வீட்டிலிருந்து 15 அடி தூரத்தில் சம்பவம் நடநததாக கூறப்படும் இடம் இருக்கும். அந்த இடத்திலிருந்து எங்கள் வீட்டிற்கு வளையும் வளைவில் 50 அடி தூரத்தில் இருக்கும். சின்னபையன் என்பவரின் கொலை வழக்கு என் மீது உள்ளது என்றால் சரிதான். என் மீது கொலை வழக்கு போட்டுள்ளதால் அங்கு இருப்பர்களை மது அருந்திவிட்டு தொந்தரவு செய்தேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடநததாக கூறப்படும் இடம் நான் மட்டும் தான் இருந்தேன் என்றாலும், அதன் பிறகு தான் வீட்டிற்கு சென்று மருமகளிடம் கூறினேன் என்றால் சரிதான். சம்பவ நடநததாக சொல்லப்படும் போது இருட்டாக இருந்தது என்றால் சரிதான். வெளிச்சம் எதுவும் இல்லை என்றாலும் சரிதான். என் மகன் வருவதற்கான அரை மணி நேரம் அந்த

இடத்தில் இருந்தேன். என் மகன் வந்த பிறகு தொப்பூர் காவல் நிலையத்திற்கு சென்று இரவு 09.00 மணிக்கு புகாரை நாங்கள் சொல்ல, சொல்ல போலிஸார் எழுதினார். அதன்பிறகு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். மேற்படி சொல்லப்பட்ட புகாருக்கு தான் தற்போது நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். தருமபுரி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன். பின்பு தங்கவேல் தனியார் மருத்துவமனைக்கு மூன்று நாட்கள் கழித்து சிகிச்சை பெற்றேன். அதன்பிறகு போலிஸார் என்னிடம் மருத்துவமனையில் வாக்குமூலம் பெற்றார். மேற்படி அந்த மருத்துவமனையில் இருந்து மருத்துவரிடம் சொல்லிவிட்டு நான் சென்றேன். நான் அரசு மருத்துவமனையில் சிசிக்சையில் இருந்த போது இரண்டு நாட்கள் கழித்து தொப்பூர் போலிஸார் வந்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். மருத்துவரிடம் வழக்கு குறித்து எதுவும் கூறவில்லை. உடல்நிலை சரியில்லாத என்று கூறி மருத்துவமனையில் சேர்ந்தேன். வேறு எதுவும் நான் மருத்துவரிடம் கூறவில்லை. சம்பவம் நடந்தாக சொல்லப்படும் இடம் எதிரி ராஜாவுக்கும், எதிரி தம்பிக்கும் பாத்தியப்பட்டது என்று சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அதைப்பற்றி தெரியாது. எதிரி 1ம் எதிரி ராஜா நான் அடித்ததாக மேட்டுர் அரசு மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை பெற்றார் என்றாலும், அந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக நான் போதையில் இருசக்கர வாகனத்திலிருந்து விழுந்துவிட்டு, பஞ்சாயத்து தலைவர் துாண்டுதலின் பெயரில் எதிரிகள் பொய்யாக புகார் அளித்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தற்போது வரை எதிரிகளை மிரட்டி கொண்டிருக்கிறேன் என்றால் சரியல்ல.

SUSHMITHA RAJAMANICKAM

Digitally signed by SUSHMITHA RAJAMANICKAM
Date: 2026.02.25 17:46:26 +0530